## சுருக்கம்

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை – வனம் –2021–2022 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு – தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையத்தை ஏற்படுத்துதல் – நிருவாக ஒப்புதல் – விரிவான திட்ட அறிக்கையை தயாரித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.7) துறை**

அரசாணை (ப) எண். 157

நாள்: 30.10.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஐப்பசி – 14

படிக்கவும்:

1. மாண்புமிகு அமைச்சர் (வனம்) அவர்களால் 03.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட அறிவிப்பு.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் (துறைத் தலைவர்) கடித எண். GIS/036970/ 2021 நாள்: 05.10.2021

*******

**ஆணை:**

தமிழ்நாடு வனத்துறையானது மிகவும் வளமான வரலாற்றையும், பல்லுயிர் பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது. 1856 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இத்துறையானது, 160 ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது. வனங்களின் வளமான பாரம்பரியம், அவற்றின் மேலாண்மை அமைப்பு முறைகள் மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை பிரதிபலிக்கும் பல வரலாற்று ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் குறிப்புகள் துறையிடம் உள்ளன. வனப் பாதுகாப்பு, பல்லுயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் வன உயிர் மேலாண்மை ஆகிய துறைகளில் அனைவரையும் கவரக்கூடிய வகையிலுள்ள இந்தியாவின் பழமையான அமைப்புகளில் தமிழ்நாட்டு வனத்துறை என்பது நமது மாநிலத்தின் பெருமையாகும். பிறரை கவரக்கூடிய வகையில் வனம் தொடர்பான பல வெளியீடுகள் இருந்தபோதிலும், தகவல் மற்றும் தரவை எளிதாக அணுகுவதற்கு எந்த வனக் களஞ்சியமும் இல்லை. வனத் தகவல்களின் எண்மிய களஞ்சியத்தை உருவாக்குவது எதிர்கால வனத் துறையின் முயற்சிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், வருங்கால சந்ததியினருக்கான தகவல்களையும் பாதுகாக்க உதவும் வகையிலும் இருக்கும்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வன ஆவணக்களஞ்சியம் மற்றும் தரவு மையம் அமைக்கப்படும் என்று அரசால் 03.09.2021 ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி, தமிழகத்தின் தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் அதன் வளமான பாதுகாப்பு வரலாறு குறித்து விலைமதிப்பற்ற தகவல் களஞ்சியமாக, சென்னையில் தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையம் (TNFADC) அமைக்கப்படும். இது, தமிழ்நாடு வன முன்முயற்சிகள் பற்றிய கூடுதல் புரிதலுக்கு பங்களிக்கும். மேலும்,

(கு.பி.பா)

தகவல்களுக்கான அணுகலை விரைவாகவும், பயனுள்ளதாகவும் வழங்க முழு ஆதார வளத்தையும் ஒரு மின் நூலகத்தில் எண்மிய மயமாக்க இத்தரவு மையம் முயற்சிக்கும். மேலும், தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையம், வனப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான வளமான காப்பகப் பொருட்களின் கருவூலமாகவும் இருக்கும்.

3. தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையம் பின்வருவனவற்றை உள்ளடக்கிய களஞ்சியமாக இருக்கும்:-

i. வன ஆய்வு அறிக்கைகள்.
ii. அறிவியல் வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள்.
iii. அரசாணைகள் மற்றும் அரசிதழ் அறிவிப்புகள்.
iv. பழைய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் வரலாற்று குறிப்புகள்.
v. வன வரைபடங்கள்.
vi. வன தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், மூலிகைகள் பற்றிய புத்தகங்கள் / கையேடுகள்.
vii. அரிய புகைப்படங்கள்.
viii. வனச் செயல் திட்டங்கள், வன உயிரின மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் ஆண்டு அறிக்கைகள்.
ix. ஆராய்ச்சி வெளியீடுகள்.
x. வனம் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள், செய்திமடல்கள்.
xi. வன கையேடுகள் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள்.
xii. தனித்துவமான வளங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு இயக்கம்.
xiii. உலகம் முழுவதும் உள்ள வனம் தொடர்பான வளங்கள்.
xiv. தமிழக வனத்துறையின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றை ஆவணப்படுத்தும் அரிய புகைப்படங்கள், காட்சி வில்லைகள், நிழற்படமறி நிலை தகடுகள் மற்றும் புகைப்படதகடுகள்.
xv. கட்டுரைகள், கடிதப் போக்குவரத்துகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் புகைப்படங்கள் போன்றவற்றின் நகல்கள் உட்பட வனப் பணி தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பு.
xvi. புகைப்படங்கள் மற்றும் விருதுகள், ஆய்வு உதவித்தொகைகள் போன்ற விவரங்கள்.
xvii. மத்திய மற்றும் மாநில அரசுகள் அங்கீகரித்துள்ள வனம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்கள் மற்றும் தொலைநோக்கு ஆவணங்கள்.

4. தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையமானது, ஆராய்ச்சி, வெளியீடு மற்றும் கல்வித் துறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது வன வரலாறு, இயற்கை வளங்கள் மற்றும் மேலாண்மை தொழில்நுட்பங்களில் ஆர்வமுள்ள அனைவருக்கும் மதிப்புமிக்கதாக இருக்கும். ஆராய்ச்சியாளர்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தவிர, இந்தியா மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள மாணவர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் வனம் மற்றும் சுற்றுச்சூழலில் ஆர்வமுள்ள அனைவருக்கும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

5. தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையமானது வரலாற்று மற்றும் அறிவியல் பதிவுருக்களை நிரந்தரமாக நீண்ட காலம் வரை பாதுகாத்து வைக்கும்.

இது தமிழ்நாடு வனத் துறையின் பாரம்பரியத்தை ஆவணப்படுத்தி, பாதுகாத்து, வெளி உலகுக்குக் காண்பிக்கும். இந்த களஞ்சியம் வனத்துறையினர், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினரை நிச்சயமாக ஊக்குவிக்கும்.

6. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை, அவர்கள், தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையத்தை அமைப்பதற்காக, அத்தகைய மதிப்புமிக்க திட்டங்களில் பணிபுரிந்து, பணி சாதனையை நிரூபித்துப் பதிவுரு கொண்ட ஒரு புகழ்பெற்ற முகமை / அமைப்பினை ஈடுபடுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஆவணங்களை பல்வேறு வன மண்டலங்கள் மற்றும் வனக் கோட்டங்கள் மற்றும் கள அலுவலகங்களிலிருந்து சேகரித்தல், தொகுத்தல், குறியிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை முகமை/அமைப்பு செய்யும். இந்த இணையவழி அணுகல் மற்றும் வருங்கால சந்ததியினருக்காக ஒரே நேரத்தில் பாதுகாப்பதற்காக அவற்றை ஒரு மின் நூலகமாக எண்மியமயமாக்கவும் இந்த முகமை/அமைப்பு உதவும்.

7. அரசு கவனமாக ஆய்வு செய்த பின்னர், சென்னையில் தமிழ்நாடு வனக் களஞ்சியம் மற்றும் தரவு மையத்தை (TNFADC) அமைப்பதற்காக நிருவாக ஒப்புதல் அளிக்கிறது. மேலும், விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக ரூ 5.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கிறது. இத்திட்டத்திற்கான நிதியானது தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் (TAFCORN) பெரு நிறுவன – சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து (CSR) பெறப்படும்.

8. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.குஎண்: 45486/கா.ப.பா(ம)மீ/2021 நாள்: 26.10.2021–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா சாஹூ
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை– 15.
முதன்மை கணக்குத் துறை தலைவர், சென்னை – 18.
சம்பள மற்றும் கணக்குகள் அலுவலகம், சென்னை – 35.

<u>நகல்:</u>
நிதித் (கா.ப.பா (ம) மீ) துறை, சென்னை – 9.
திட்டம், வளர்ச்சி & சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சரின் (வனம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் IV–அவர்களின் தனிச்செயலாளர் சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் & வனத்துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்